செய்தி வெளியீடு எண்: 133 /2018 நாள்: 08.03.2018

**வேலூர் மாவட்ட வேளாண் சாராத நிறுவனங்களில் தோட்டக்கலைத் துறையின் மூலம் செடிகள் நடவு செய்ய ஓர் அரிய வாய்ப்பு!**

**வேலூர் மாவட்ட அங்கன்வாடி மறறும் சத்துணவு மையங்கள் விண்ணப்பித்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் அறிவுருத்தல்!!**

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் (2017-18) தோட்டக்கலை சாராத நிறுவனங்கள்/ அரசு அலுவலகங்களில் தோட்டக்கலையை ஊக்கப்படுத்தும் நோக்கத்திற்காக ரு.25.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் கீழ் அரசு தோட்டக்கலை பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பல்வேறு மரக்கன்றுகள்/ வணிக மலர்ச்செடிகள் 40% மானியத்தில் நடவு செய்து வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின் விருப்பப்படி அத்துறையின் கீழ் நிர்வகிக்கப்படும் அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து மிக்க காய்கறிகளும், பழங்களும் கிடைக்கும் வண்ணம், முருங்கை, பப்பாளி செடிகளை நடவு செய்து வளர்க்க இடவசதியுள்ள அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களை தேர்வு செய்யப்பட்டுள்ளன.

அதற்காக அனைத்து அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களுக்கு முருங்கை மற்றும் பப்பாளிச்செடிகள் வழங்குவதற்காக அரசு தோட்டக்கலை பண்ணைகளில் இச்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகத்திற்கு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. எனவே இத்திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் உள்ள 2374 அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்களுக்கு 4748 பப்பாளி மற்றும் 4748 முருங்கை கன்றுகள் விநியோகிக்க ஏதுவாக முருங்கை மற்றும் பப்பாளி வளர்ப்பதற்கு இடவசதியுள்ள அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையங்கள் மாவட்ட சமுக நலத்துறையின் வழியாக தோட்டக்கலை துணை இயக்குநர் வேலூர் அவர்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவருக்காக